This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# வஸந்த்! வஸந்த்!

## 1. ராஜ ராஜன் கிணறு

"சுந்தர சோழன் தனது மூத்த புதல்வனது வீரச்செயலையும் ஆற்றலையும் உணர்ந்து கி.பி.966ல் அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். மற்றொரு மகனாகிய அருள் மொழித்தேவன் என்பவனே பின்னர் எத்திசையும் புகழ் பரப்பி இனிது வாழ்ந்த முதல் ராஜ ராஜசோழன் ஆவான்."

எஸ்டேட் டியூட்டி ஆக்ட்டில் ஆழ்ந்திருந்த கணேஷ் எரிச்சலுடன் நிமிர்ந்து "வஸந்த்! இப்ப நிறுத்தப் போறியா இல்லையா?" என்றான்.

"ரொம்ப சுவாரஸ்யமா இருக்குது பாஸ்! இந்த ஆதித்த கரிகாலன் 969ல் க்ளோஸ்! நாலு பேர் சேர்ந்து ஆளைத் தீர்த்துட்டாங்க! இதில ஒரு பெரிய சஸ்பென்ஸ் கதையே இருக்கு. உத்தம சோழன் ஏன் அந்த நாலு பேருக்கும் தண்டனை கொடுக்கல? அதுலதான் பாஸ் இருக்கு மர்மம்."

"வஸந்த்! நிஜமாச் சொல்லு. திடீரென்று உனக்கு ஏன் சரித்திரத்துல இத்தனை ஈ.பா?"

"என்ன பண்றது பாஸ்? சரித்திரக் கதையெல்லாம் இப்பப் படக்குனு நிறுத்திர்றான்களே! அதான் சொந்தமாவே படிச்சுடலாம்னுட்டு... எல்லா காரியங்களையும் சொந்தமாகச் செஞ்சுக்கிறது நல்லதில்லையா?"

"ஏய்! நிஜமாவே உனக்குச் சரித்திரத்துல இன்ட்ரஸ்ட்டா?"

"பின்னே?"

"நான் நம்பலை. ஏதாவது சரித்திரம் படிக்கிற பொண்ணை சைட் அடிக்கிறியா?"

"நடு சென்டர்ல குத்திட்டிங்களே, பாஸ். நான் சரித்திரம் படிக்கிறதுக்கு காரணம் ஒரு பெண்ணில்லை. அவ அப்பா!"

"சரிதான்! பொம்பளை விஷயம்தான்"

"இல்லை பாஸ்; காதல்! தெய்வீக காதல்!

மூத்தவர் சம்மதியில் – வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனோடி – இதுபார்
கன்னதுக்கு முத்தமொன்று!"

"ஏண்டா பாரதியைக் கோட் பண்றதுக்கு வேறெதுவும் வரி அகப்படலையா?"